முருகப்பெருமான் துணை

**மகான் மெய்ப்பொருள் நாயனார் அருளிய அனுகூல ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**29.03.2023**, புதன்கிழமை

1. பாவ வினை போக்கி மக்களை
   பண்புள ஞானவான்களாக்க
   அவதாரம் புரிந்து வந்தநல்
   ஆறுமுக அரங்க ஞானியே
2. ஞானியே உன் பெருமை கூறி
   ஞாலமதில் சுபகிருது சேல்திங்கள்
   இனிமைபட மூவைதிகதி புந்திவாரம்
   (சுபகிருது வருடம் பங்குனி மாதம் 15 ம் நாள், 29.03.2023, புதன்கிழமை)
   இயம்பிடுவேன் அனுகூல ஆசி
3. ஆசிதனை மெய்ப்பொருள் நாயனாரும்
   அகிலம் நலம்பெற உரைப்பேன்
   வாசி வெல்லும் மேல்நிலை
   வையகத்தார் அடைந்து சிறந்து
4. சிறக்க சிறப்பறிவு காட்டும்
   சித்திமிகு அரங்க ஞானிவழி
   மறுக்கா ஏற்று வந்துமே
   மண்ணுலகோர் ஞானம் பயில
5. பயில உண்டான வெண்துகில் தீட்சை
   பண்புடன் ஏற்றுப் பின்னே
   தயவே வடிவான ஞானிகளின்
   தக்க நாமசெப பூசைமுறை
6. முறையாக அனுதினம் செய்து
   முடிந்த அன்னதான சேவை
   குறைவிலா துவக்க வேண்டும்
   குறிப்பாக இரண்டும் தடையற
7. தடையற ஒரவர் கடைபிடிக்க
   தானாக உள்ளூற மாற்றம்
   சோடை பீடை அனுகாதபடி
   சுத்த நெறியை கடைபிடிக்கும்

8. கடைபிடிக்கும் வைராக்கியமும்
கட்டுப்பாடும் பெருகி இனிதே
தடையற ஜீவகாருண்யமதின்
தத்துவம் விளங்கி இனிதே
9. இனிதே குருவடி விசுவாசம்
இணையிலா சரணாகதியாக
துணிந்துமே தொடரத்தொடர
தொடரும் கரும வினைகள் விலகி
10. விலகியே பிறவியின் நோக்கமும்
வினை அகல மெய்ப்பொருள்
காலமதில் உணர்ந்து தெளிந்து
கந்தவேலன் அனுகூலம் கிட்ட
11. கிட்டவே வாசி வசமுடன்
குறைவிலா ஞானம் கைகூடி
தட்டாது ஞானிகள் ஆவர்
தரணி மாற்றும் சக்திகளுமாவர்
அனுகூல ஆசி முற்றே

—சுபம்—